**செய்தி வெளியீடு எண்: 366** **நாள்: 23.06.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்தநாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கவியரசு கண்ணதாசன் அவர்களின் 93ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 24.6.2019 அன்று காலை 8.30 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 24ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

கவியரசு கண்ணதாசன் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரை அடுத்த சிறுகூடல்பட்டி கிராமத்தில் சாத்தப்பன் – விசாலாட்சி இணையருக்கு 24.6.1927 அன்று மகனாகப் பிறந்தார். இந்து மதத்தில் பிறந்தவராயினும் மதவேற்றுமை கருதாமல் இயேசு காவியம் பாடியவர். கம்பரின் செய்யுளிலும், பாரதியாரின் பாடல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கவியரசு கண்ணதாசன் அவர்கள் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகள், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்கள், நவீனங்கள், கட்டுரைகள் பல எழுதியவர். திருமகள், திரைஒலி, மேதாவி, சண்டமாருதம், தென்றல் கண்ணதாசன் மாத இதழ், கடிதம் ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்துள்ளார். இவரது ஆட்டனத்தி ஆதிமந்தி செய்யுள் தமிழ்நாடு அரசு பாடநூலில் இடம்பெற்றுள்ளது.

கவியரசு கண்ணதாசன் அவர்கள், 1970ஆம் ஆண்டு மத்திய, மாநில அரசின் சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றார். 1978ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு கண்ணதாசன் அவர்களை அரசவைக் கவிஞராக நியமித்து பெருமைப்படுத்தியது. 1979ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருது பெற்ற கவியரசு கண்ணதாசன் அவர்கள் 17.10.1981 அன்று இயற்கை எய்தினார்.

கவியரசு கண்ணதாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 24.6.2019 அன்று காலை 8.30 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**